**Dated : 30.10.2025**

**O.S.No. 46/2024**

**PW.3 – திரு. வெங்கடேசன்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என்னுடைய சகலை அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன், என்னுடைய சகலை பெயர் ராஜாராம், அவர் தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் ராஜாராம் என்னுடைய சகலை என்ற விவரம் தெரிவித்திருக்கிறேனா என்றால் தெரிவித்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பாக பிரிவினை பிரச்சனையின் காரணமாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் ஏற்கனவே அவர்களுக்கு பாகம் ஏற்பட்டது என்ற விவரத்தை சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். ஏற்கனவே பாகம் பிரிபட்டுவிட்டதாக நான் சொல்லும்பட்சத்தில் பாகப்பிரிவினை கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சாட்சி தாமே கூறுகிறார் ஏற்கனவே அவர்களுக்குள் பாகம் ஆகிவிட்டது. ஜெயபாலும், ராஜாராமும் சேர்ந்து தான் கிணறு வெட்டினார்கள். அந்த கிணறு வெட்டுவதற்கு ஜெயபாலும் பணம் கொடுத்தார் என்றால் இல்லை. பழைய கிணற்றிலிருந்து புதிய கிணற்றிற்கு சர்வீஸ் கனெக்ஷன் கொடுப்பதற்கு தனக்கு ஆட்சேபனை இல்லை என ஜெயபால் கையொப்பமிட்டு கொடுத்தார் என்றால் சரிதான்.

ஜெயபாலும், அவரது தகப்பனாரும் சேர்ந்து தான் கிணறு வெட்டினார்கள், அப்போது ராஜாராம் ஓசூரில் வேலை பார்த்து வந்தார் என்று சொன்னால் சரிதான். 2018ல் கிணறு வெட்டிய விவரத்தினை என்னுடைய பிரமாண பத்திரத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். எத்தனை பேரை அழைத்து வந்து எவ்வளவு நாட்கள் கிணறு வெட்டினோம் என்று என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால்

சொல்லியிருக்கிறேன்.  கிணறு வெட்டிய விவரம் குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது, ராஜாராம் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிணறு வெட்டிய விவரத்தை பற்றி ராஜாராம் தான் என்னை சொல்ல சொன்னாரா என்றால் ஆமாம். இந்த வழக்கு விவரங்கள் என்னவென்று தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R — Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.